# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண்.10/2016 நாள் 26.08.2016

**உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்தல்**

1995ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதி எண் 21 மற்றும் 2006ம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதி எண் 19 ஆகியவற்றின் கீழ் உள்ளாட்சிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களை சேர்க்கவும், நீக்கவும், அதிகாரம் இல்லை. எனவே, வாக்காளர் பட்டியல்களில் உள்ள இறந்த வாக்காளர்களின் பெயர்கள் (Deceased Voters), குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்கள் (shifted voters) மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களின் பெயர்கள் (Double Entry voters) போன்றவற்றை நீக்கவும், புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் தொடர்புடைய சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால், அவர்கள் மூலமே இப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆகவே, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் ஆகியவற்றை மேற்கொள்வது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலரை அணுகுமாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

26/08/16

மக்கள் தொடர்பு அலுவலர்